# மானிடவியலும் ஆக்க இலக்கியமும்

க. சண்முகலிங்கம்
கூட்டுறவு இயக்கத்திணைக்களம்
யாழ்ப்பாணம்

மனிதனைப் பற்றியும், அவனது ஆக்கங்களையும் நடத்தையையும் ஆராயும் அறிவியல் துறையே மானிடவியல் எனச்சுருக்கமாகக் கூறலாம். மனிதன் பற்றிய ஆய்வு எனக் கூறும்பொழுது தனிமனிதன் பற்றிய ஆய்வை அது குறிக்கவில்லை மானிடவியல் தனிமனிதனை அன்றி மானிடக் குழுக்கள், இனங்கள், சமூகங்கள் பற்றிய ஆய்வுத்துறையாக அமைகின்றது: அது மனிதனைச் சமூகமனிதன் என்ற நிலையில் வைத்து ஆய்கின்றது. உடலியல், உடலமைப்பியல், உளவியல் முதலிய அறிவியல் துறைகளின் ஆய்வுப்பொருளாக தனிமனிதன், தனிமனித நடத்தை என்பன அமையும். மானிடவியலோவெனின் சமூகமனிதன் பற்றிய இயலாகும்.

அறிவியலை இயற்கை அறிவியல், (Physical Sciences) சமூகஅறிவியல்(Social Sciences)என இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். பௌதிகம், இரசாயனம், உடலியல் என்பன இயற்கை அறிவியலில் அடங்கும் துறைகளுக்கு உதாரணங்களாகும். சமூக அறிவியல் துறையில் அடங்குவன பொருளியல், சமூகவியல், அரசியல்போன்ற அறிவியல்கள். மானிடவியல் இயற்கை, சமூக அறிவியல்கள் என்ற இரு பிரிவுகளையும் தழுவிய அறிவியலாகும். இந்த அடிப்படையில் மானிடவியலை 1. பௌதீக மானிடவியல் 2. சமூக அல்லது பண்பாட்டு மானிடவியல் என இரு பிரிவுகளாக வகுக்கலாம்.

மனிதனுக்கு இருவகையான பாரம்பரியம் உண்டு. ஒன்று உயிரியற் பாரம்பரியம்; (Biological Inheritance) மற்றது சமூகப்பாரம்பரியம் (Social Inheritance). மனிதன் தான் பெற்றுள்ள உயிரியற் பண்புகளை எப்படி அடைந்தான் என்பதைப் பௌதீக மானிடவியல் கூறுகிறது. பௌதீக மானிடவியல் மனிதனை உயிர், விலங்கு என்ற நிலையில் வைத்து ஆராய்கிறது. உயிர்ப் பரிணாமவளர்ச்சியில் பாலூட்டிகள் என்ற பிரிவு தோன்றியதும், அதன் வளர்ச்சி நிலையில் பிரைமேற்ஸ் (Primates) என்ற விலங்குக் குடும்பம் தோன்றியதும், பின்னர் இற்றைக்குப் பத்துலட்சம் வருடங்களுக்கு முன்னர் மனிதன் தோன்றியதுமான பரிணாம வரலாற்றையும், மனிதனின் உயிரியல் பண்புகள் வளர்ந்த முறையையும் பௌதீக மானிடவியல் விளக்குகின்றது. மனிதன் காட்டுமிராண்டிநிலை, அநாகரிகநிலை, நாகரிகநிலை என்ற மூன்று கட்டங்களைத் தாண்டி வளர்ந்துள்ளான். இந்நிலைகளின் கடைக்கட்டமான நாகரிக வாழ்வு பற்றித் தான் எழுதப்பட்ட வரலாறு கூறுகிறது. இக்கட்டம் மனிதனின் நீண்ட வரலாற்றின் மிகக் குறுகிய காலமான 10,000 வருடத்தை மட்டுமே உள்ளடக்கியுள்ளது. மனிதனின் 10 லட்சம் வருட வாழ்க்கையின் நூறில் தொண்ணூற்றி ஒன்பது பங்கு வாழ்வு

காட்டுமிராண்டிநிலை, அநாகரிகநிலை என்ற கட்டங்களில் கழிந்தது. மனிதனின் இயற்கைக்கெதிரான இந்த நீண்ட போராட்ட வரலாற்றைப் பௌதிக மானிடவியல் ஆராய்கிறது.

சமூக அல்லது பண்பாட்டு மானிடவியல் மனிதவியல் வருணனை, (Ethnology) தொல்பொருளியல், (Prehistoric Archaeology) மொழியியல் (Linguistics) என்ற பிரிவுகளைக் கொண்டது. சமூக, பண்பாட்டு மானிடவியல், மனிதனின் வாழிடம், தொழில், பொருளாதாரம், சமூக அமைப்பு, இரத்த உறவு முறை, தனி மனித வாழ்வின் படிகளான பிறப்பு, பூப்படைதல், திருமணம், இறப்பு என்பன சமூகவாழ்வில் பெறும் பங்கு, குடும்பம், சொத்துரிமை, சமயம், சடங்குகள், நம்பிக்கைகள் என்பன போன்றவற்றை ஆராய்கிறது. சமூக மானிடவியல் பற்றிய பாடப்புத்தகம் ஒன்றின் பொருளடக்கத்தில் மேலே கூறிய விடயங்கள் அமைந்திருப்பதை நாம் காணல் இயலும்.

சில வேறுபாடுகள் நீங்கலாக சமூகமானிடவியல் ஆயும் விடயங்களையே சமூகவியல் (Sociology) எனும் அறிவியல் துறையும் கூறுகின்றது. அவ்வாறாயின் சமூகவியலையும், சமூகமானிடவியலையும் பிரிக்கும் எல்லைக்கோடு யாது? இந்த எல்லையைத் திட்டவட்டமாகக் கூறுதல் கடினமே,

அநாகரிக சமூகம் (Savage Society) காட்டுமிராண்டி வாழ்க்கை, புராதன சமூகம் (Primitive Society) குழுச்சமூகம் (Tribal Society) மரபுவழிச் சமூகம் (Traditional) என்ற சொற்றொடர்கள் குறிக்கும் எல்லைக்குள் மானிடவியல் அமைகிறது எனவும், நவீன சமூகம் பற்றிய அறிவியலே சமூகவியல் என்றும் சுருக்கமாகக் கூறலாம் எனினும் இவ்வரையறை பூரணமானதன்று. நவீன கைத்தொழில் நகரங்களில் வாழும் மனிதக்குழுக்களையும் கூட சமூக மானிடவியலாளர் ஆராய்ந்து வருகின்றனர்.

இதுவரை கூறியவற்றில் இருந்து மானிடவியல் என்றால் என்ன என்பதைச் சுருக்கமாகக் கண்டோம். இனி, மானிடவியலுக்கும் ஆக்க இலக்கியத்திற்கும் உள்ள சம்பந்தம் யாது என்ற விடயத்திற்கு வருவோம். மானிடவியல் என்ற அறிவியல்துறை ஆக்க இலக்கியத்தை இருவிதமாகப் பாதித்துள்ளது.

1. மனித வாழ்வைப் பொருளாகக் கொண்டது இலக்கியம். ஆதிவாசிகள் வாழ்வு பற்றிய அறிவின் பெருக்கம், ஆதிவாசிகள் வாழ்வை மையமாகக் கொண்ட சிறுகதை, நாவல் போன்ற இலக்கியங்கள் எழ வழிவகுத்துள்ளது.
2. இலக்கிய விமர்சனம் ஆக்க இலக்கியத்தின் ஒரு கூறாகும். மானிடவியல் ஆய்வுகள் இலக்கிய விமர்சனத்தின் எல்லைகளை விரிவுபடுத்தியுள்ளது. குறிப்பாகப் பழந்தமிழ் இலக்கிய ஆய்விற்கு மானிடவியலின் பங்கு பெரிதும் உதவியுள்ளது.

ஆக்க இலக்கிய கர்த்தாக்கள் புதிய சூழல்களையும், புதிய அனுபவங்களையும் தேடிச்சென்று, வாழ்ந்தும் அனுபவித்தும் தமது ஆக்கங்களைப் படைப்பதன்மூலம் இலக்கியத்தின் பொருளை ஆழமும் அகலமும் உடையதாக்குகின்றனர். இவ்வகையில் ஆதிவாசிகள் வாழ்வுபற்றிய நாவல்கள், சிறுகதைகள், நாடகங்கள் இலக்கியத்தின் செழுமையைக் கூட்டுவனவாகும். தமிழில் தோன்றிய நாவல்களை எடுத்து நோக்குவோமாயின் சமூக நாவல், வரலாற்று நாவல், பிரதேச நாவல், டெல்லி, சென்னை, கொழும்பு முதலிய நகரவாழ்வை மையமாகக் கொண்ட நாவல், அகில உலகப் பின்னணி, யுத்தம், உள்நாட்டுப்போர், இராணுவ வாழ்க்கை, அரசியல் என்ற பல

வேறு பின்னணிகளைப் பொருளாகக்கொண்ட நாவல் என்ற வகைப்பாடுகளைக் காணல் இயலும். இத்தகைய பொருள்விரிவு இலக்கியத்திற்கு வளம் ஊட்டுவதென்பதில் கருத்து வேறுபாட்டுக்கு இடமில்லை.

ஆதிவாசிகளின் வாழ்க்கை கலைத்துறையில் இடம் பெற்றமைக்குச் சிறந்த உதாரணம் ஆங்கிலத்திரைப்படத் துறையாகும். அமெரிக்க இந்தியர், ஆபிரிக்காவின் பல்வேறு இனங்கள், மெலனீசியர், பொலினீசியர், ஸ்பானியர் தாக்குதலால் அழிந்த அஸ்டெக், மாயா நாகரிக இனங்கள் ஆகிய ஆதிவாசிகளைப் பொருளாகக் கொண்ட எண்ணிறந்த திரைப்படங்கள் வெளிவந்துள்ளன. தமிழ்த்திரைப் படங்களில் இத்தகைய உதாரணம் எதுவும் இல்லை. சில ஆண்டுகளுக்கு முன்னர் ரொடியர் சமூக வாழ்வைப் பொருளாகக் கொண்ட 'சடோஸ் கண்டுலு' என்னும் சிங்களத்திரைப்படம் வெளிவந்தது. வேடர் என்ற ஆதிவாசிகள் வாழ்வைச் சித்தரிக்கும் சிங்களத்திரைப்படம் ஒன்றும் வெளியிடப்பட்டது. நகர நாகரிகத்தின் வாடையே அற்ற ஒதுக்குப்புறமான கிராம வாழ்வைச் சித்தரிக்கும் 'பினரமலி' என்ற திரைப்படமும், லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் நெறிப்படுத்திய 'தாபநிஸா' என்ற திரைப்படமும் சமூக மானிடவியலாளனின் கவனத்தை ஈர்க்கக்கூடிய சிங்கள திரைக் காவியங்கள்.

சிலப்பதிகாரத்தில் மலைவாழ் மக்கள், இடையர் முதலியோர் வாழ்வு சித்தரிக்கப்படுகிறது. சேக்கிழார் கண்ணப்பன் என்ற வேடனையும், கம்பன் குகன் என்ற பாத்திரத்தையும் உருவாக்கியுள்ளனர். குறவன் குறத்தியர் என்ற பாத்திரங்கள் குறவஞ்சி என்ற பிரபந்தங்களில் வருகின்றன. பழந்தமிழ்ப்புலவர்கள், நாகரிக சமூகத்தின் எல்லைப்புறங்களில் வாழ்ந்த ஆதிவாசிகளின் வாழ்வையும் இலக்கியத்தில் இடம் பெறச் செய்தனர். நவீன இலக்கிய கர்த்தாக்கள் ஆதிவாசிகளின் வாழ்வைச் சித்தரிக்கும்பொழுது மானிடவியல் அறிவின்துணையை அணுகுகின்றனர். அல்லது ஆதிவாசிகளுடன் வாழ்ந்து, அவர்களின் வாழ்வுமுறை பற்றிய அறிவுடன் எழுதுகின்றனர். ஆதிவாசிகள் வாழ்வை மையமாகக்கொண்ட தமிழ் நாவல்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டு 'குறிஞ்சித்தேன்' என்ற நாவல். இதன் ஆசிரியர் ராஜம் கிருஷ்ணன். எம். எஸ். கல்யாணசுந்தரம் எழுதிய 'இருபது வருஷங்கள்' என்ற நாவலிலும் ஆதிவாசிகள் பற்றிய செய்திகள் வருகின்றன. தமிழில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளவையான 'சிந்து முதல் கங்கை வரை' 'வால்காவிலிருந்து கங்கை வரை' என்ற இரு நூல்கள் வரலாற்று, மானிடவியல் அறிவியல் நோக்கில் எழுதப்பட்ட புனைகதை நூல்களாகும். இவற்றின் ஆசிரியர் ராகுல் சாங்கிருத்யாயன் ஆவர்.

மானிடவியல் ஆதிவாசிகள்பற்றிய ஆய்வாக மட்டும் அமையாது நவீனகைத்தொழில் சமூகத்தின் தாக்கங்கள் அற்று இயங்கும் எல்லாச் சமூகங்கள் பற்றியதாக அமைகிறது. இலங்கையிலும் இந்தியாவிலும் சுமார் 80% மக்கள் கிராமங்களிலேயே வாழ்கின்றனர். இந்திய வரலாற்றில் இன்று வரையான எல்லாக் கட்டங்களிலும் புராதன குழுவாழ்வின் மிச்சசொச்சங்கள் நிலைத்து வந்துள்ளன. தடைப்பட்ட பொருளியல் சமூக வளர்ச்சி இதன் காரணமாக அமைந்தது. எனவே எமது இன்றைய சமூக வாழ்வை விளங்கிக்கொள்ள மானிடவியல் அறிவு அவசியமானது. எமது சடங்குகள், நம்பிக்கைகள், திருமணம், குடும்ப அமைப்பு என்பன பற்றிய தேர்ந்த ஞானம் இலக்கிய கர்த்தாவிற்கு வேண்டும். இத்தகைய அறிவுத் தெளிவுடன் எழுதப்பட்ட நாவல் செ. கணேசலிங்கனின் 'சடங்கு' தமிழகத்தில் வெளிவந்த நாவல்களுள் நீல. பத்மநாதன் எழுதிய 'தலைமுறைகள்' நாவல் விதந்துரைக்கத் தக்கது. நீல. பத்மநாதன் தமது நாவலின் முன்னுரையின் பின்வருமாறு கூறுகிறார்.

'வெறும் கதைப்பிரியர்களுக்கு நான் சொல்வதெல்லாம்………… எனக்குப் பழக்கமான ஒரு சமூகத்தின் நாடித் துடிப்புக்கள், பூர்வீக வரலாற்று விளக்கங்கள், ஆசார அனுஷ்டானங்கள், சடங்கு சம்பிரதாயங்கள், விழாக்கள், விளையாட்டுகள், வாழையடி வாழையாய் வந்தடைந்த கதைகள், பாடல்கள், பழமொழிகள், பிராந்திய கொச்சை வார்த்தைகள். பேச்சு வழக்குகள். தொனிவிஷேசங்கள், வாக்கிய அமைப்புக்கள்—இத்தியாதி இத்தியாதியவைகளையெல்லாம் கூடியமட்டும் சிந்தாமல் சிதறுமல் கலாபூர்வமாய் வெளிப்பிரகடனம் பண்ண இங்கே கதை வித்தானது பக்க பலமாய்ப் பயன் பட்டிருக்கின்றது என்பது தான்.'[1]

நீல. பத்மநாதன் குறித்துள்ள விடயங்கள் யாவும் மானிடவியலாளனின் ஆய்வுக்குரிய விடயங்களே. தமிழர் சமூகவாழ்வைத் திறம்படச் சித்தரித்துள்ள ஏனைய நாவல்களாக, தாகம் (கு. சின்னப்பாரதி) வேள்வித்தீ (எம். வி. வெங்கட்ராம்) நீண்டபயணம் (செ. கணேசலிங்கம்) புத்தம் வீடு (ஹெப்சிபா யேசுதாசன்) பள்ளிகொண்டபுரம் (நீல. பத்மநாதன்) என்பனவற்றைக் குறிப்பிடலாம். தமிழில் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டுள்ள. அண்டைவீட்டார் (மலையாளம், பி. கேசவதேவ்) இரண்டுபடி, செம்மீன் (மலையாளம், தகழி சிவசங்கரன்பிள்ளை) மண்ணும் மக்களும் (கன்னடம், சிவராம காரந்த்) ஆகியவற்றையும் இங்கே குறிப்பிடுதல் பொருந்துவதே.

இந்நூற்ருண்டின் தொடக்க காலத்தில் சிவில்சேவை உத்தியோகத்தராக இலங்கையில் பணிபுரிந்தவரான லியனுட் வூல்ப் Village in the Jungle என்னும் நாவலை எழுதினர். ஆங்கில சமூகத்தைச் சேர்ந்த இவர் நகரவாழ்வையோ, முன்னேறிய விவசாய சமூக வாழ்வையோ உயர் மக்களையோ கதைப்பொருளாகக் கொள்ளாது கம்புறுப்பிட்டியாவில் இருந்து முப்பது மைல் தொலைவில் இருந்த காட்டுக்கிராமம் ஒன்றைக் கதை நிகழும் பின்னணியாகக் கொள்கின்ருர். இக்கிராம மக்கள் ஆதிவாசிகளின் நிலையிலேதான் வாழ்கின்ருர்கள். இயற்கையின் அடிமையாக வாழ்கின்ற ஒரு பின்தங்கிய சமூகத்தின் இரங்கத்தக்க மிருக வாழ்க்கை, வறுமை, அறியாமை, முன்னேறிய சமூகத்தின்பால் அது கொள்ளும் அச்சம், அச்சமூகத்தின் மூடநம்பிக்கைகள் என்பனவற்றை இந்த நாவல் அழகாகச் சித்தரிக்கின்றது. கடந்த எழுபது வருட காலத்தில் ஏற்பட்ட பொருளாதார சமூக மாற்றங்கள் பல மாறுதல்களை எமது நாட்டின் கிராமப்பகுதிகளில்ஏற்படுத்தியுள்ள போதிலும் வவுனியா, மன்னர், மட்டக்களப்பு போன்ற பகுதிகளில் உள்ள பின்தங்கிய கிராமங்களின் வாழ்க்கை நிலைமைகள் லியனுட்வூல்ப் காட்டும் வாழ்வுக்கு ஒப்பானதே.

இலங்கையின் பின்தங்கிய கிராமங்களின் வாழ்க்கையை மையமாக வைத்து எழுதப்பட்ட நாவல்கள் மிகக் குறைவு. இத்தொடர்பில் கிராமவாழ்க்கையின் தன்மை பற்றிய குறிப்பு ஒன்றைக் கூறுதல் பொருந்தும். 'கிராமம் இன்பலோகம்' என்பது மரபுவழிச் சமூகம் பற்றி நம் மத்தியில் நிலவும் பொய்நம்பிக்கையாகும். இத்தகைய நோக்குடன் எழுதப்படும் நாவல் ஒரு கட்டுக்கதையாகவே இருக்க முடியும். சமூக மானிடவியலாளனுக்கும், சமூகவியலாளனுக்கும் உள்ள அறிவு பூர்வமான பார்வை நாவலாசிரியனுக்கு இல்லாவிடில் கிராமவாழ்வுபற்றிய ஒரு யதார்த்த நாவலைப் படைத்தல் இயலாது. நாட்டுப் பாடல்கள் தொடர்பாக க. கைலாசபதி எழுதியவை இவ்விடத்தில் குறித்தல் பொருத்தமானது.

''….. அதைப்போலவே 'கிராமப்புறம் இன்பலோகம்' என்று கூறுவதும் மிகைக் கூற்ருகும். தூரத்திலே தெருவோரத்திலிருந்து பார்க்கும்பொழுது கிராமப்புறம்

PERMAN… …CE

முழுவதும் பசும்புற்றரையாகவும், மெல்லிய இளநங்கையர் கூட்டமாகவும் தென்படலாம். நகரத்தின் ஜனசந்தடி இல்லாமல் இருக்கலாம். ஆனால் அவை யாவும் புறத்தோற்றங்களே. கிராமப்புறத்திலும் மக்கள்தான் வசிக்கின்றார்கள். மக்கள் மத்தியில் அங்கும் முரண்பாடும் மோதலும் உண்டு; பிணி உண்டு; பொய்யுண்டு; சாக்காடு உண்டு; சூதுண்டு; பொறாமையுண்டு. சுருங்கக்கூறின் மனிதன் படைத்த அத்தனை கெடுபிடிகளும் குறைந்த அளவிலேனும் உண்டு'[2]

வியனாட் ஹூல்வின் நாவல் காட்டும் இரங்கத்தக்க, கொடுமையான காட்டுக்கிராம வாழ்வு இவ்வுண்மையை விளக்கும்.

ஆக்க இலக்கியத்தின் ஒரு பிரிவான இலக்கியத்திறனாய்விற்கும் மானிடவியலுக்கும் உள்ள தொடர்பை அடுத்து நோக்குவோம். மனிதப்பரிணாமத்தின் ஒரு கட்டத்தில் மொழி தோன்றியது. மொழிவளர்ச்சியடைந்தபின் இலக்கியம் உருவாகியது. முதலில் வாய்மொழிப்பாடல்களும் பின்னர் எழுத்தில் அமைந்த இலக்கியங்களும் தோன்றின. இலக்கியத்தின் தோற்றகாலம் மனிதசமூகம் பல பெரிய சாதனைகளை நிறைவேற்றி முன்னேறிய ஒரு காலகட்டமாகும். கிரேக்கம், லத்தீன், சமஸ்கிருதம், தமிழ் என்ற மொழிகளின் ஆதி இலக்கியங்கள் தோன்றிய காலத்தில், மேற்குறித்த மொழிகளைப்பேசிய மக்கள் இனத்தவர்கள் வாழ்ந்த காலம் நியோலிதிக்காலம் என்ற வரலாற்றுக் கால கட்டத்தைத் தாண்டிய காலமாகும். உணவுதேடல், வேட்டையாடல் என்ற நிலைகளைக் கடந்து மந்தை வளர்ப்பு, புராதன விவசாயம், பண்ட உற்பத்திப்பெருக்கம், நகரவாழ்வு என்ற பொருளாதார நிலைகளைச் சமூகம் அடைந்தது. இந்தப்படிகளை மனிதன் அடைந்த கட்டங்களிலேயே உலகின் செம்மொழி இலக்கியங்கள் தோன்றின. மனித நாகரிகமடைந்த வரலாற்றைக் கூறும் அறிவியல் துறை மானிடவியல் ஆதலின், இலக்கியத்திற்கும் மானிடவியலுக்கும் உள்ள சம்பந்தம் கூறாமலேவிளங்கும்.

ஐரோப்பிய செம்மொழி இலக்கியத்துறைக்கும் மானிடவியலுக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. கிரேக்க, லத்தீன் செம்மொழி இலக்கியங்களைக் கற்ற அறிஞர் மானிடவியல் அறிவைப் பயன்படுத்தி இலக்கிய ஆய்வுகளைச் செய்தனர். இதேபோல் மானிடவியலாளர் பலர் கிரேக்க, லத்தீன் இலக்கியங்களைத் தம் ஆய்வுக்குப் பயன்படுத்தினர். மானிடவியலாளனின் ஆய்வுப்பொருள் புராதன சமூகம் ஆதலின் புராதன சமூகங்களான கிரேக்கர், ரோமர் இலக்கியங்கள் மானிடவியலுடன் தொடர்புபடுவதில் ஆச்சரியமில்லை.

புராதன தமிழரின் சமூகவாழ்வை மானிடவியல் நோக்கில் எழுதிய எஸ். சிங்காரவேலு தமது நூலின் முகவுரையில் தமிழ் ஆராய்ச்சிக்கும் மானிடவியலுக்கும் உள்ள தொடர்பின் அவசியம் பற்றி விளக்கியுள்ளார். கிரேக்க, லத்தீன் இலக்கிய ஆய்விற்கும் மானிடவியலிற்கும் உள்ள தொடர்புபற்றி விளக்கும் இந்நூலாசிரியர் பிரான்ஸ்போவஸ், குரோபர், டைலர் போன்ற மானிடவியலாளர் ஐரோப்பிய செம்மொழி இலக்கியப்புலமை மிகுந்தோராய் இருந்தமையையும் கிரேக்க இலக்கிய ஆய்வாளர்களான ஜோர்ஜ். தோம்சன் முதலியோர் எந்தளவு மானிடவியல் அறிவுடையோராய் உள்ளனர் என்பதையும் குறித்துள்ளார்.[3]

மானிடவியல் அறிவின் துணையோடு சங்க இலக்கியம் ஆராயப்படுமிடத்து பல உண்மைகள் எமக்குத் துலக்கமாகும். சங்ககாலச் சமூக வாழ்க்கைபற்றி நா. வானமாமலை பின்வருமாறு கூறுகிறார்.

'வேட்டையாடும் இனக்குழு வாழ்க்கையும், ஆடு மாடு மேய்க்கும் இனக்குழு வாழ்க்கையும் அழிந்து தனிச்சொத்துரிமையும் அரசும் தோன்றிய வரலாற்றுக்காலம் என்பதை மானிடவியல் நோக்கோடு சங்க இலக்கியத்தைக் காண்போர் அறியலாம். இந்நிலைகளில் தொன்மைச் சமுதாயம் அழிந்து நிலவுடமை அமைப்புத்தோன்றியது. ஒருபுறம் தனிச்சொத்துடைமையை அடிப்படையாகக் கொண்ட வர்க்க சமுதாயமும் இன்னொருபுறம் தொன்மைப் பொதுவுடமைச் சமுதாயமும் ஏககாலத்தில் நிலவின. ஒன்று அழிந்து வந்தது. மற்றொன்று வளர்ந்து வந்தது.'[4]

க. கைலாசபதி பின்வருமாறு எழுதியுள்ளார்:

'சான்றோர் இலக்கியம் காட்டும் சமுதாயம் நாகரிக உலகின் நுழை வாயிலிலே நிற்கும் சமுதாயமாகும். கிறித்து சகாப்தம் தொடங்குவதற்கு ஏழெட்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் தமிழக வரைப்பிலே நூற்றுக்கணக்கான குலமரபுக்குழுக்கள் (tribes சிதறிக் கிடந்தன. ............ ஒளியர், ஆவியர், கோசர், அதிபர், அருவர், மழவர், வழுதியர் முதலிய கூட்ட மக்களெல்லாம் இத்தகைய குலமரபுச் சமூக வாழ்க்கையில் இருந்தவரே. இவர்களது பெயர்கள் குலமரபுப் பெயர்களாகும். நாளடைவில் இக்குலங்களிற் சில இரும்பு முதலிய உலோகங்களைப் பயன்படுத்தவும் வளர்ச்சி பெற்ற பண்டமாற்றில் ஈடுபடவும் பழகின. இது குலத்துக்குள்ளும் குலங்களுக்கிடையிலும் ஏற்றத்தாழ்வுகளை உண்டாக்கியது. இப்பொருளாதாரப் புரட்சியை விரிவாக ஆராய இது ஏற்ற சந்தர்ப்பம் அன்று. மனித வரலாற்றில் நிகழ்ந்த பெரும் புரட்சியாகிய இம்மாற்றத்தினையே எங்கல்ஸ் 'குடும்பம் தனியுடமை அரசு ஆகியவற்றின் தோற்றம்' என்னும் நூலில் விவரித்துள்ளார்.'[5]

குலமரபுச் சமுதாயங்களின் வாழ்வு எத்தகையது? அவற்றின் உலகக்கண்ணோட்டம் என்ன? எங்கல்ஸ் குறித்த பெரும் பொருளாதாரமாற்றம் தமிழகத்தில் எங்ஙனம் நிகழ்ந்தது? என்ற கேள்விகளுக்கான விடைகளை அறிந்து கொள்ளாமல் புறநானூற்றுப் பாடல்களையோ ஏனைய சங்க இலக்கியங்களையோ சரிவரப் புரிந்து கொள்ளல் இயலாது.

கடந்த பத்து ஆண்டு காலத்தில் மானிடவியல் நோக்கில் எழுதப்பட்ட இலக்கிய ஆய்வுகள் பல தமிழில் வெளிவந்துள்ளன. நா. வானமாமலை, க. கைலாசபதி, கா. சிவத்தம்பி, பி. எல். சாமி, சு. வரதராசலு, எஸ். சிங்காரவேலு என்போர் இத்தகைய ஆய்வுக் கட்டுரைகளையும் நூல்களையும் எழுதியோருள் குறிப்பிடத்தக்கவர்கள்.

க. கைலாசபதி எழுதிய வீரயுகம் பற்றிய ஆங்கில நூலும், தமிழிலே எழுதிய பல கட்டுரைகளும் சங்கப் புறப்பாடல்கள் பற்றிய ஆய்வில் புதுப் பாதையை வகுத்துள்ளன. சங்ககாலம் தமிழர் வரலாற்றின் பொற்காலம் என்ற கருத்து பரவலாக தமிழர் மத்தியில் நிலவி வந்தது. எனினும் உண்மைக்கு முகம் கொடுக்கும் நேர்மையும் துணிவும் உடைய தமிழறிஞர் பலர் பொற்காலச்சித்திரத்திற்கு மாறான வகையில் கொலையும் கொள்ளையும் சங்ககாலத் தமிழகத்தில் நிலவியதைக் காட்டியுள்ளனர். பொற்காலம் என வருணனை செய்வதோ அல்லது சங்க காலம் இருண்ட காலமே என அங்கு நிலவிய கொலையையும் கொள்ளையையும் சான்று காட்டி நிறுவுதலோ அறிவு விளக்கத்திற்குத் துணை செய்யா. சங்க காலத்தில் கொலை வெறி ஏன் தோன்றியது? கொலைக்கும் கொள்ளைக்குமான சமூகத்தேவை என்ன? என்பவற்றை ஆய்வாளர் காட்ட வேண்டும். வரலாறு, சமூகவியல், மானிட

வியல், அறிவியல் துறைகளின் துணையுடன் ஒப்பியல் நோக்கில் சங்க இலக்கியத்தை ஆராயும் க. கைலாசபதியின் தமிழர் வீரயுகம் பற்றிய ஆய்வு இத்தகைய கேள்விகளுக்கான பதில் தருவதாய் உள்ளது.[6]

ஏனைய அறிவியல் துறைகளுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைந்தளவு கால வரலாற்றையுடைய அறிவியல் துறையாக மானிடவியல் அமைகிறது. தமிழில் இத்துறை பற்றிய அறிவு தற்போது வளரத் தொடங்கியுள்ளது. 'ஆராய்ச்சி' என்னும் காலாண்டு ஆய்விதழ் மானிடவியல் ஆய்வுக்கு முதன்மை கொடுத்து வருகின்றது. மானிடவியல் அறிவு தமிழ் ஆக்க இலக்கியத்தைச் செழுமைப்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

## அடிக்குறிப்புக்கள்

1. பத்மநாதன். நீல., தலைமுறைகள், ஜெயகுமார் ஸ்ரோர்ஸ், நாகர்கோவில், இரண்டாம் பதிப்பு, 1971

2. கைலாசபதி. க. ''நாட்டுப்பாடல்கள்'' சிந்தனை மலர் 1 இதழ் 1 ஏப்பிறில் 1967 பக்கம் 46

3. Singaravelu S. Social Life of Tamils Classical Period, University of Malasiya, Kuala Lumpur, 1976 பக். 8–9

4. வானமாமலை. நா. ''பந்தமிழ் இலக்கியத்தில் பொருள் முதல்வாதக் கருத்துக்கள்'' ஆராய்ச்சி, மலர் 2, இதழ் 1, அக்டோபர் 1970, பக்கம் 14,

5. கைலாசபதி. க. பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், பாரிநிலையம், சென்னை. முதற்பதிப்பு டிசம்பர் 1966

6. Kailasapathy. K., Tamil Heroic Poetry Oxford University Press, 1968